வேண்டும்—இதற்கு 400 கே. வி. லைன் போட வேண்டும். டிரான்ஸ்மிஷன் செய்து கொள்ள வசதியாக இருக்கும். பெயர் தான் தேசிய கிரிட், நடைமுறையில் அது தமிழ்நாடு கிரிட்டாக இருக்கும்.

(முற்பகல் 9.10

திரு. ப. நெடுமாறன்: இந்தத் தேசிய மின் கிரிட் அமைக்கப் பட இருப்பதை விளக்கி அது தென் மாநிலங்களுக்கு உதவியாக இருக்கும் என்றும் குறிப்பாக தமிழ்நாட்டுக்கு தென் மாநில கிரிட்டிலிருந்து மின்சாரம் எடுத்துக் கொள்ள வசதியாக இருக்கும் என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த தேசிய மின் கிரிட் அமைக்கிற திட்டம் மத்திய அரசு மின் உற்பத்தியை யும் மின் விநியோகத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அடிக்கடி யோசனை சொல்லிக் கொண்டிருக்கிறதே, அதற்கு முன்னோடியாக இது அமைந்திருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நாம் எல்லாம் இங்கே இருக்கிறபோது அவ்வளவு இலேசாக விட்டுவிடமாட்டோம்.

திரு. என். வி. என். சோமு: சென்னை நகரில் பல தெருக் களில் இருக்கிற விளக்குகள் எரியாமல் இருளடைந்து கிடக்கிறது. மாநகராட்சியிடம் சொல்லியும்கூட எந்தவிதப் பயனும் இல்லை. இதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் போட வேண்டிய கேள்வி.

திரு. தி. அன்பழகன்: இந்தத் தெரு விளக்குகள் அடிக்கடி ப்யூஸாகி விடுவதால் கூடுமான வரையில் தெரு விளக்கு பல்புகளை குழாய் விளக்குகளாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: உள்ளாட்சி மன்றங்களின் தீர்மானங்களின் அடிப்படையில் படிப்படியாக அவைகள் நிறை வேற்றப்பட்டு வருகின்றன.

தெருவிளக்குகளுக்கு வோல்டேஜ் ஸ்டேபிலைசர் பொருத்தும் திட்டம்.

*வினா எண். 83—திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:—

தமிழகத்திலுள்ள தெரு விளக்குகள் பியூஸ் போகாமலிருக்க voltage stabilizer பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: இல்லை. எல்லா தெரு விளக்குகளுக்கும் வோல்டேஜ் ஸ்டேபிலைசர் பொருத்துவதற்கு ரூ. 6 கோடிக்கு மேல் செலவு ஆகும். இதற்கு பதிலாக 250 வோல்ட் மின் அழுத்த ஏற்புடைய பல்புகளை வாங்குவதற்கும் மின் கட்டமைப்பில் (கிரிட்)முனைமாற்றிகளை பொருத்துவதற்கும் மின் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

1981 ஆகஸ்ட் 27]

திரு வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: தமிழகத்தில் இருக்கிற கிராமங்களில் உள்ள தெருவிளக்குகள் பெரும்பாலும் எரியாமல் இருப்பதற்கு காரணம், அங்கே பணியாற்றுகிற ஊழியர்கள் லைனிலிருந்து நேரடியாக கனக்ஷன் கொடுத்துவிடுகிறார்கள். தெரு விளக்குகள் அடிக்கடி ப்யூஸாக அது ஒரு காரணம். ஆகவே லைனிலிருந்து நேரடியாக தெரு விளக்குகளுக்கு கனக்ஷன் கொடுக்கிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அதற்குத் தகுந்த ஆதாரங்களைத் தந்தால் அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: இந்த குமிழ், உருண்டை பல்புகளில் திடீரென்று மின்சாரம் பாய்கிற காரணத்தால் அதிகமான அளவிற்கு பல்புகள் ப்யூஸ் ஆகின்றன. ரூ. 1.25 கொடுத்து வால்டேஜ் ஸ்டெபிலைசர் கருவி மாட்ட முடியும் என்று சொல்கிறார்களே, அதைப் பற்றி மின்சார வாரியம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 'வால்டேஜ் ஸ்டெபிலைஸர்' போட்டால் ரூபாய் ஆறு கோடிக்கு மேல் செலவாகும். மிகப் பெருமளவில் செலவாகும். அதற்குமாறாக இப்போது அரசாங்கத்தால் 230 வோல்ட்ஸ் மின்விளக்குகள் போடப்படுகின்றன. இரவிலோ அல்லது லோட் இல்லாதபோதோ வோல்டேஜ் அதிகமாக ஆகிவிடுவதால் இந்தப் பல்புகள் ப்யூஸாகின்றன. 300 வோட்ஸ் பல்புகள் வேண்டுமென்ற வகையில் நாம் வாங்கவேண்டியிருக்கிறது. மின்வாரியத்தைப் பொறுத்தவரையில் லோயஸ்ட் டெண்டர் என்ற அடிப்படையில் வாங்கும்போது பலவகையான பிரச்னைகள் எழுகின்றன. சிலபேர்கள் 230 வோட்ஸ் பல்புகளை 250 வோட்ஸ் பல்புகள் என்று கொடுக்கிறவர்களும் இருக்கிறார்கள். முக்கியமான நிறுவனங்களான பிலிப்ஸ், ஜெனரல் எலக்ட்ரிக்கல்ஸ் போன்ற பெரிய நிறுவனங்களோடு பேசி மின்வாரியம் 250 வோல்ட்ஸ் பல்புகளை, தரமான பல்புகளைத் தரவேண்டும் என்று ஒரு நீண்ட கால அடிப்படையில் அவர்களோடு பேச வேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

காஞ்சி நகரில் பால்விநியோக நிறுவனம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 84—திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம்: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சி நகரத்திலுள்ள மக்களுக்கு சென்னை நகரிலுள்ளது போல பால் விநியோக நிறுவனம் ஒன்றை அரசு அமைக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இரண்டாம் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் பல ஊர்களில் பால் மற்றும் பால் பொருள் விற்பனை நிலையங்களை தமிழ்நாடு